ராணி
காமிக்ஸ்
வேட்டை வீரர்
டேவிட் தோன்றும்
பூனைத்
தீவு!
ரூ.
1-50

கருத்துப் போட்டி எண்- 40 முடிவு

"கூர்க்கா வீரன்!" சித்திரக் கதை கருத்துப் போட்டியில், கேப்டன் லேசரை அடித்து வீழ்த்திவிட்டு, அதிரடிப் படைக்கு சார்ஜெண்ட் ஹாரி தலைமை தாங்கியது சரியா, தவறு என்று கேட்டு இருந்தோம்.

பி. கீதா (குஞ்சான்காடு, சேலம்–1), ஜே. அம்சகுமாரி பி. காம் (அரச்சலூர்), செ. தமிழ்செல்வி மின்சிவா (நாகர்கோவில்–'), எஸ். என். பி. அருணாசலம் (ஈரோடு–1), ஜி. கே. உமாபதி(பிள்ளையார் கோவில் தெரு, சேலம்–1), லோகநாதன் (கீழ்பவானி), வி. நரசிம்ம மூர்த்தி (குகை, சேலம்–6), என். ராமலிங்கம் (சோழபுரம்), சே. கந்த சாமி (பெரியப்பட்டி) ஆகியோர் அருமையான கருத்துக்களை எழுதி இருந்தார்கள்.

ஆனால் பொருத்தமான கருத்தை எழுதி ரூ. 50 பரிசு பெறுபவர்:—

கு. சையத் இப்ராகிம்,
த/பெ: எம். ஏ. குத்தூஸ்,
கதவு எண்: 119 பி.
எண் 2, குமரன் தெரு.
சேலம்–636 001.

இவரது கருத்து வருமாறு:—

"ராணி காமிக்'சின் 48-வது இதழான கூர்க்கா வீரனில் சார்ஜெண்ட் ஹாரி, கேப்டன் லேசரை அடித்து வீழ்த்திவிட்டு அதிரடிப் படைக்கு தலைமை தாங்கியது சரியா? தவறு—என்பது இக்கட்டான போட்டி!

ஒரு படையை நடத்திச் செல்லும் படைத் தலைவனின் தலையாய குணங்களில் முக்கியமானது அதிகாரமும் பொறுப்புணர்ச்சியும் ஆகும். கேப்டன் லேசரிடம் நூற்றுக்கு நூற்றொரு சதவீதம் அதிகாரமிருந் தது. ஆனால் பொறுப்புணர்ச்சியோ நூற்றுக்கு பூஜ்யம்தான். தனது படை வீரர்களை அறிவிலித்தனமாக பலி கொடுப்பதில் லேசருக்கு நிகர் அவரே. பாலைவனத்தில் நடந்த ஓர் சிறு போர் அதற்கு ஓர் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

இதை முற்றிலும் உணர்ந்திருந்த சார்ஜெண்ட் ஹாரி, அதிரடிப் படையினரின் பணி. இலக்கு பாதிக்கும் விதத்தில் கேப்டன் லேசர் உத்தரவு போடும்போது வேறு வழி இன்றி தானே லேசரை அடித்து வீழ்த்தி அதிரடிப் படைக்குத் தலைமை ஏற்கிறார்.

சந்தர்ப்ப சூழ்நிலைகளை வைத்து பார்க்கும்போது ஹாரி செய்தது சரி. நூற்றுக்கு நூறு சரி.

ஆனால் கட்டுப்பாடு மிக்க ராணுவத்தில், அதுவும் போர் காலத் தில் தலைமை ஏற்கும் அதிகாரி சொல்வதை கேட்டே ஆகவேண்டும். இதை வைத்துப் பார்க்கும்பேகது ஹாரியின் செய்கை தவறு.

ஆனால் கதையின் பின்பகுதியில் ஹாரியை. கர்னல் பாராட்டு வதைக் கொண்டு பார்த்தால் ஹாரி செய்தது "சரியான தவறு!" என்று நாம் தீர்ப்பு அளிக்கலாம்!

இவ்வாறு இப்ராகிம் கூறி இருக்கிறார்.

ராணி காமிக்ஸ்—50
(மாதம் இருமுறை இதழ்)

ஜூலை 15—31
1986

வேட்டை வீரர் டேவிட் தோன்றும்

புதைத்தீவு!

சார்லசின் சொந்த ஊர் நியூ ஆர்லன்ஸ் அருகே உள்ள பாட்டன் என்பதாகும். அங்கேதான் அவரது தகப்பனார் பிராட்லி இருக்கிறார். தாய் இறந்துவிட்டாள். சார்லசுக்கு ஒரு தங்கை மட்டும் இருந்தாள். அவள் பெயர் மேரி. தகப்பனார் சொன்ன ஒரு வேலையைச் செய்ய சார்லஸ் நியூ ஆர்லன்ஸ் வந்து இருந்தான்.

அங்கே ஓராயிஸ் என்ற நகை வியாபாரியை சார்லஸ் சந்தித்தான். ஓராயிஸ், சார்லசின் குடும்பத்துடன் நீண்டநாள் தொடர்பு உள்ள நண்பர். அவரை சார்லஸ் மாமா என்றுதான் அழைப்பான்.



மேரி பிறந்த நாளின் போது தாயின் நகைகளை மகளுக்கு அளிக்க பிராட்லி திட்டமிட்டு இருந்தார்.
மாமா! விலை உயர்ந்த இந்த வைர நகைகளை பத்திரமாக பார்த்துக் கொள்ளுங்க!
எனது சொந்த நகைகளுடன் இதையும் சேர்த்து பாதுகாப்பா வைக்கிறேன்!
சார்லஸ் கொடுத்த நகைகளை தரையில் இருந்த ரகசிய இடத்தில் தன் நகைகளுடன் சேர்த்து வைத்தார், லூயிஸ்!
சார்லஸ்! இந்த ரகசிய இடம் யாருக்கும் தெரியாது. முதல் தடவையா இப்போது உனக்கு காட்டுகிறேன்.
இந்த ரகசியத்தை யாரிடமும் சொல்ல மாட்டேன் மாமா!
அப்போது நகை கடை முன் 2 பேர் வந்து நின்றனர். ஒருவன் பெயர் வின்சன். பெரிய சூதாடி. அடுத்தவன் வின்சனின் கையாள். பணத்துக்காக எதையும் செய்யக்கூடிய அடியாள்.
நான் சொன்னபடி சரியா செய். இந்தா என் துப்பாக்கி!
நீங்க சொல்றபடி செய்கிறேன். ஆனால் சார்லஸ் சூதாட்ட விடுதிக்கு வருவானா?

இரகசிய இடத்தில் நகைகளை வைத்து அதன் கதவை மூடியதும், சார்லசிடம் லூயிஸ் ஒரு தகவலை வெளியிட்டார்.
3 தடவை எனது பெட்டகத்தை திருடர்கள் கொள்ளை அடித்துவிட்டனர். அதனால்தான் ரகசிய இடத்தை ஏற்படுத்தினேன்.
நகைகளை தங்கை பிறந்த நாள் விழாவுக்கு கொண்டு வரும்படி சொல்லிவிட்டு சார்லஸ் விடை பெற்றான்.
உம்! அவனை வழிமறித்து, நான் சொன்னபடி செய். தக்க நேரத்தில் நான் வருகிறேன்.
சரி! அந்த சொங்கியை மடக்குகிறேன்!
தகப்பனார் சொன்னபடி சில வியாபார வேலைகளையும் முடித்துவிட்டு மறுநாள் வீடு திரும்ப நினைத்த சார்லசை, அடியாள் வழி மறித்தான்.
எனக்கும் உன் தகப்பனாருக்கும் தீர்க்க வேண்டிய பழைய கணக்கு ஒன்று இருக்கு. அதை இப்போ நீ தீர்க்க வேண்டும்.
நீ என்ன சொல்கிறாய்? உன்னை எனக்கு தெரியவே தெரியாதே!

ஆத்திரத்தில் சார்லஸ், அந்த முரடனைத் தாக்கினான்.
ஆ! என் கையை முறிக்கவா பார்க்கிறாய்?
இந்தா! இது உன்-தாடைக்கு!
சார்லசின் எதிர்பாராத தாக்குதலால் முரடன் நிலைகுலைந்தான்.
ஆ!
சார்லசை முரடன் தாக்க வேண்டும், அப்போது வின்சன் குறுக்கிட்டு சமாதானப்படுத்தி சார்லசிடம் நல்ல பெயர் வாங்க வேண்டும் என்பது திட்டம். ஆனால் அந்த திட்டம் செயல்படவில்லை! அடிபட்ட ஆத்திரத்தில் முரடன்—
என்னையா அடிக்கிறாய்? உன்னை...!
சார்லஸ்! பின்னால் பார்!


கீழே விழுந்த துப்பாக்கியை ஏற்கனவே எடுத்திருந்த வின்சன், அடியாளை தடுக்க சுட்டான்.
குறி தவறாமல் சுட்டிங்க சார். அவனை பிடிக்கி-றேன்!
ரவுடிப் பயலே! இதோடு ஓடிவிடு. இல்லை அடுத்த குண்டு நெஞ்சில் பாயும்.


நிலைமை மீண்டும் தனக்கு சாதகமாகிவிட்ட நிம்மதியில் வின்சன் சார்லசிடம்—
தற்செயலாக நான் இங்கே வந்தேன். இல்லாவிட்டால் பாவி, உங்களைக் கொன்று இருப்பான். வாங்க அந்த விடுதியில் போய்-ப்பேசுவோம். என் பெயர் வின்சன்.
ACE HIGH GAM
POSITIVELY NO
நோ...சரி... சரி...வாங்க!

தன் உயிரைக் காத்த ஒருவரின் பேச்சை தட்டமுடியாமல், அந்த சூதாட்ட விடுதிக்குள் நுழைந்த சார்லஸ் 2 மணி நேரத்தில் பல ஆயிரம் டாலர் கடனாளி ஆனான்!
நான் இனி விளையாடவில்லை. என்னிடம் பணம் இல்லை.
நண்பர்களுக்கு பணம் முக்கியம் இல்லை. சார்லஸ்! நீ பட்டு இருக்கும் கடனுக்கு ஒரு வெள்ளைக்-காகிதத்தில் கையெழுத்து போட்டு கொடுத்தால் போதும்.
புத்திசாலித்தனமாக தன் திட்டத்தை நிறைவேற்றிய வின்சன், சார்லசுடன் வெளியே வந்தான்.
சார்லஸ்! நீ சூதாடி கடன் பட்டு இருப்பதை அறிந்தால் உன் தந்தை சீறுவார்!
அதனால்?
லூயிஸ் நகைகளை மறைத்து வைத்துள்ள இடத்தை காட்டு. இந்த புரோ நோட்டை கிழித்து விடுகிறேன்.
என்ன? லூயிஸ் மாமாவுக்கு துரோகமா? நோ...நோ...

வின்சனிடம் பேச்சை நிறுத்திவிட்டு சார்லஸ் அவன் வழியில் புறப்பட்டான். உடனே வின்சன் கையை அசைக்க, 2 பேர் வின்சனிடம் வந்தனர்.
உம்! அவனே மடக்கி – நிறுத்துங்க!
சரி, பாஸ்!
சார்லசை, முரடர்கள் திடீர் என்று தாக்கி பிடித்தனர். அப்போது வின்சன் வந்து—
உம்...வைர நகைகளை லூயிஸ் எங்கே மறைத்து வைத்து இருக்கான்? உம்... சொல்!
சொல்ல மாட்டேன்!
உடனே முரடர்கள் கண்மண் தெரியாமல் தாக்கினர்.
இப்போ சொல். ரகசிய மறைவிடம் எங்கே இருக்கு?
உள் அறையில் தரையில்...

அன்று இரவு லூயிஸ் கடையை அடைத்துக்கொண்டு இருந்தார். அப்போது வின்சன் தன் ஆட்களுடன் அங்கே வர—
சாரி...நாளை காலை வாருங்கள். கடையை மூடி விட்டேன்.
அது உன் தவறு. கதவை மரியாதையா திற. உம்...
திறக்க மறுத்த கிழவர் லூயிஸை அடித்து உதைத்து கதவை திறக்க வைத்தனர்.
ஆ! ஐயோ! வலிக்குதே!
ஏய் கிழவா சத்தம் போடாதே! இரவு காவலாளி காதில் விழட்டும் என்று தந்திரம் செய்கிறாயா?
திடீர் என்று லூயிஸ் பதறினார்.
அந்த வைர நகைகளை எடுக்காதே! அவை என்னது அல்ல. பிளீஸ்...பிளீஸ்...
ஏய்! அவனை பேச விடாதே!

உடனே ஒரு முரடன் துப்பாக்கியால் லூயிசை சுட்டான். அவர் சுருண்டு விழுந்து செத்தார்.
டேய் டார்னர்! கொன்றுவிட்டாயே! துப்பாக்கி சத்தம் கேட்டு இரவு காவலாளி இங்கே வரலாம்! சீக்கிரம் இங்கிருந்து ஓடணும்!

இதற்கு இடையில் மயங்கி விழுந்த சார்லசுக்கு நினைவு திரும்பியது. அவன் எழுந்தபடி—
ரகசிய மறைவிடம் பற்றி கேட்டனரே! என் நகைகள்! லூயிஸ் மாமாவை எச்சரிக்க வேண்டும்!


ஆபத்தை உணர்ந்து கொண்ட சார்லஸ், லூயிஸ் கடைக்கு ஓடி வந்தான். ஆனால் அதற்குள் எல்லாம் முடிந்துவிட்டது.
ஐயோ! நகைகள் களவு போய்விட்டன! மாமா இறந்துவிட்டார்!


இரவு காவலாளி வந்துவிட்டதை அறிந்து சார்லஸ் மேலும் பதறினான். நீதி துறை சரியாக செயல்படாத காலம் அது. தன் கழுத்துக்கு மரணக் கயிறு காத்திருப்பதை அறிந்த சார்லஸ் ஓட ஆரம்பித்தான்.
கொலை! கொலை! ஏய் சார்லஸ்! ஓடாதே! நில்!
சில மணி நேரத்தில் அப்பாவி சார்லஸ் முதல் தடவையாக சூதாடினான். பணத்தை இழந்தான். குடும்ப நகைகளை இழந்தான். கடைசியில் கொலைகார பழியுடன் ஓடுகிறான்... ஓடுகிறான்...

அந்த நேரத்தில், அமெரிக்காவின் வட பகுதியில் ஓஹியோ நதி பாயும் மலைக் காட்டில், வியாபாரியும், பெரும் நிலச் சொந்தக்காரரும் ஆன பிராட்லி வேட்டை ஆடிக்கொண்டு இருந்தார். அவருக்கு துணையாக, அந்தப் பிராந்தியத்தில் வேட்டை வீரராக பிரசித்தி பெற்று இருந்த டேவிட், வேட்டையாடினர்.

அப்போது பிராட்லி, தனது பொழுது போக்கை நிறுத்திக்கொண்டு, பேட்டன் நகருக்கு திரும்ப வேண்டிய அவசர செய்தி வந்தது.
முதலாளி! உங்களுக்கு பேட்டன் நகரில் இருந்து அவசர செய்தி!
கொலை குற்றத்துக்காக சார்லஸ் தேடப்படுவதையும், அவன் தலைக்கு விலை வைக்கப்பட்டு இருப்பதையும் மகள் மேரி எழுதி இருந்ததை பிராட்லி படித்தார்.
டேவிட்! நீயும் என்னுடன் வா. உன் உதவி தேவைப்படுது!
ஐயா! ஒரு படகு காவலுக்கு போகணும் உங்களை பேட்டனில் சந்திக்கிறேன்
பிராட்லி உடனடியாக பேட்டன் நகருக்கு விரைய, டேவிட் படகு கொள்ளையர்களை வீழ்த்தி, படகை பத்திரமாக கொண்டு சென்றார்.

பிறகு அவர் பேட்டன் நகர் போவதற்காக ஒரு விடுதிக்கு வந்தபோது—
டேய் டார்னர்! எனது நண்பர்களுக்கு எதிரா நடந்தால். உன்னை தொலைத்துவிடுவேன்!

டேவிட் உள்ளே வர—
மிஸ்டர் டேவிட்! எங்களைப் போல் நீங்களும் ஒதுங்கி இருங்க. அந்த பில், பயங்கரமான ஆள்!
அநியாயத்தை பார்த்துக்கொண்டு இருக்க முடியாது. மிஸ்டர் பில்! உன் கையை எடு!


அதைக் கேட்ட பில், ஆத்திரத்தில் டேவிட்டை தாக்கினார்.
இதில் நீ தலையிடாதே!
பில்லைப் பற்றி தெரிந்துகொள்ளாமல் அந்த ஆள் வம்பில் மாட்டிக்-கொண்டாரே!

பில் தாக்கியதால் ஆத்திரம் அடைந்த டேவிட், புலி போல் பாய்ந்தார்.
ஒகோ! திருப்பி தாக்க வாரியா? வா!

பில்லின் இரும்புக் கர தாக்குதலில் இருந்து டேவிட் தப்பித்தார். பிறகு அவர் வயிற்றில் குத்தி அலாக்காக தூக்கி வீசினார்.
வாவ்! பில் தொலைந்தான்!
ஆச்சரியம்
கஷ்டப்பட்டு எழுந்த பில், மீண்டும் டேவிட்டைத் தாக்க வந்தார். விடுதி சின்னா பின்னப் படப் போவதை அறிந்த முதலாளி இருவரையும் தடுத்தார்.
கை எடுத்துக் கும்பிடுகிறேன். இருவரும் இங்கே சண்டை போட வேண்டாம்!
சரி!
நிலைமையை புரிந்துகொண்ட பில், டேவிட்டை சவாலுக்கு இழுத்தார்.
நீதான் டேவிட்டா? நீ வீரனா இல்லை நான் வீரனா என்பதை எப்போது பார்க்கலாம்?
நான் எப்போதும் தயார் பில்! ஆனா இப்போ நான் அவசரமா கோடீஸ்வரர் பிராட்லி வீட்டுக்குப் போகணும்!

அதைக் கேட்டதும் டேவிட்டை, நதித் துறைக்கு பில் அழைத்து வந்தார்.
உனக்கு பிராட்லியைத் தெரியுமா? அவர் தாராள குணம் உள்ள நல்லவர். அவருக்கு எதிரா நடந்ததால்தான் டர்னரைத் தாக்கினேன். என் படகில் பயணம் செய்யுங்க. குறித்த நேரத்தில் பேட்டன் நகரில் கொண்டு போய் விடுகிறேன்.
பில்! ரொம்ப நன்றி!
பேட்டன் நகர் வந்ததும்—
டேவிட்! மிஸ்டர் பிராட்லியை நான் விசாரித்ததாக சொல். உனக்கு உதவி தேவை என்றால் என்னிடம் வா!
சரி பில்! உன் உதவிக்கு நன்றி!
டேவிட் போவதை வின்சனும், டர்னரும்! பார்த்தனர்.
அதுதான் டேவிட்! அவன் பிராட்லியிடம் போவதாக பேசியதைக் கேட்டு, உன்னை எச்சரிக்க வந்தேன்.
டேவிட் பெரிய வேட்டை வீரன் ஆச்சே! நாம் பாஸ்சிடம் விஷயத்தைச் சொல்வோம்!

நியூ ஆர்லன்ஸ் அருகே பேட்டன் என்ற இடத்தில் பிராட்லி வீட்டுக்கு டேவிட் போய்க்கொண்டு இருந்த போது மர்ம பாஸ்சை இருவர் சந்தித்தனர்.
டேவிட்டை நான் கவனிக்கிறேன். பிராட்லிக்கு ஐரோப்பாவில் இருந்து விலை உயர்ந்த சரக்குகளை ஏற்றி வரும் கப்பலை கொள்ளை அடியுங்க!

அப்போது வின்சன் ஒரு சந்தேகத்தை கிளப்பினான்—
பாஸ்! சார்லஸ் தப்பித்து தகப்பனாரிடம் உண்மையைக் கூறினால்...
அவன் மறைந்து இருக்கும் இடத்தில் இருந்து வெளியே வந்தால் கொலை செய்யப் படுவான்.

டேவிட் போய்க்கொண்டு இருந்தார். வழியில் மூடு பனியில் ஒரு உருவம் தென்பட்டது. திடீர் என்று அது அலறியது!
உதவி! உதவி!
யார் அது!? பயந்து மிரண்டு அந்த உருவம் அலறுகிறதே!

டேவிட் முன் திடீர் என்று ஒரு நீக்ரோ வாலிபன் எதிர்பட்டான். பயத்தில் அவன் முகம் வியர்த்து இருந்தது. கை, கால்கள் உதறல் எடுத்தன. நடுங்கும் குரலில் அவன்—
ஐயா! என்னைக் காப்பாற்றுங்க! ஒரு பேய் என்னை பிடிக்க வருது?
உனக்கு எந்த ஆபத்தும் இல்லை. நீ என்ன பார்த்தாய் என்று சொல்!

நேரம் இருட்டிக்கொண்டு வந்தது. மர்ம நிசப்தம் நிலவியது. டேவிட்டை ஒரு குடிசை அருகே அந்த இளைஞன் அழைத்து வந்தான்.
அந்த வீட்டில் பல ஆண்டுகளாக யாரும் குடி இருந்தது இல்லை. அதில் இருந்து ஒரு பேய் வெளியே வந்ததைப் பார்த்தேன்.
சரி, நான் போய் அந்த வீட்டைப் பார்க்கிறேன்! நீயும் வா!

நீட்டிய துப்பாக்கியுடன் அந்த வீட்டுக்குள் டேவிட் நுழைந்தார்.
பார், வீடு காலியா இருக்கு. ஆனால் யாரோ இங்கே தங்கி இருக்காங்க. மற்றபடி பேயும் இல்லை. பிசாசும் இல்லை. பயப்படாமல் உன் வீட்டுக்குப் போ!
சரி சார்! நன்றி!


பிறகு டேவிட், பிராட்லி வீட்டை அடைந்தார். அவரை பிராட்லியும், அவள் மகள் மேரியும் வரவேற்றனர்.
சார்லசை இன்னும் காணவில்லை. அதோடு, நான் இல்லாத வேளையில் எனக்கு வந்த பல சரக்கு கப்பல்கள் திருடப்பட்டு உள்ளன. அந்த நஷ்டத்தைவிட என் மகன்தான் முக்கியம்.
உங்களுக்கு எதிரா காரியங்கள் நடக்கின்றன. அதுபற்றி துப்பு துலக்கி கண்டுபிடிப்பேன். விரைவில் எல்லாவற்றையும் சிராக்குவேன்!

சார்லசை இதற்கு முன் டேவிட் பார்த்தது இல்லை. அதனால் மேரி, சார்லசின் படத்தை எடுத்து வந்து டேவிட்டிடம் காட்டினாள்.
அண்ணன் எப்போதும் வெள்ளைக் கால்சட்டையும், வெள்ளை நிற மேல் சட்டையும்தான் அணிவான்!
அந்த உடையில் சார்லஸ் அழகாக இருக்கிறான்!



இரவு சாப்பிட்டபின் டேவிட் ஓய்வு எடுத்தார். அவர் சிந்தனை சார்லசை பற்றியே சுழன்றது.
வெள்ளை உடையில் சார்லஸ்! ஒருவேளை, கைவிடப்பட்ட அந்த வீட்டில்தான் சார்லஸ் தலைமறைவாக இருக்கிறானோ? இருட்டிலும், மஞ்சு மேக மூட்டத்திலும் அவனை அந்த நீக்ரோ இளைஞன் பேய் என்று நினைத்து விட்டானோ?

மறுநாள் காலை. டேவிட், காலைக் கடன்களை முடித்துவிட்டு கீழே இறங்கி வந்தார். அங்கே பிராட்லி, இன்னொரு படகு அதிபருடன் பேசிக்கொண்டு இருந்தார். டேவிட்டிடம் பிராட்லி-
டேவிட்! ஒரு கெட்ட செய்தி. பாரிசில் இருந்து வந்த எனது சரக்குப் படகை நதிக் கொள்ளையர்கள் கைப்பற்றி விட்டார்கள். அந்தப் - படகில் சில்க் துணிகளும், விலை உயர்ந்த சாமான்களும் இருந்தன.
மிஸ்டர் பிராட்லி! நீங்க கொள்ளையரை சமாளிக்க தகுந்த ஆட்களை படகுக்கு காவல் போடணும். நான் அப்படித்தான் செய்கிறேன்.

பிராட்லியின் நண்பர் பெயர் அந்தோணி. படகு அதிபரான அவரும் பிராட்லியும் சேர்ந்து நிறைய நிலம் வாங்கி வைத்து இருந்தார்கள்.
என் மகனைக் காணோம்! வைரங்கள் களவு போய்விட்டன! படகுகளை திருடர்கள் பிடித்துக்-கொண்டனர்! தாங்கமுடியாத நஷ்டம்! நான் பாப்பர் ஆகிவிட்டேன்.
பிராட்லி! அப்படி சொல்லாதீர்கள். உங்க படகு கம்பெனி பங்குகளை வாங்கிக்-கொண்டு, நான் பணம் தருகிறேன். நாம் கூட்டாக வாங்கிய நிலங்களை விற்று பணம் திரட்டலாம். கவலை வேண்டாம்.
அந்தோணியின் யோசனையை பிராட்லி ஏற்கவில்லை.
அந்த நிலம் என் மகனுக்கு பாத்தியப்-பட்டது.
உங்க மகன் ஒரு கொலைக் குற்றவாளி. அவன் தூக்குத் தண்டனையில் இருந்து தப்பி வந்தால் அல்லவா நிலத்தை பற்றி நினைக்க வேண்டும்?
பிறகு அந்தோணி போய்விட்டார். அவர் வார்த்தைகள் டேவிட்டை சிந்திக்க வைத்தன.
அந்தோணி நல்ல நண்பர். அவர் எனக்கு உதவ நினைக்கிறார்.
ஐயா! உங்கள் பிரச்சினைகளை தீர்க்க நான் முயற்சி-செய்வேன்!


அடுத்த நிமிடமே டேவிட் புறப்பட்டார்.
பிராட்லி சார்! உங்க படகுகளை பாதுகாக்க பொருத்தமான ஆள் "பில்"தான். அவனிடம் முரட்டு வீரர்கள் பலர் உள்ளனர். படகு போக்குவரத்தில் அனுபவம் உள்ளவன். படகுகளை பாதுகாக்க அவனை நியமிக்கலாம்.
நல்ல யோசனை! அப்படியே செய் டேவிட்!

"பில்"லை டேவிட் ஒரு விடுதியில் சந்தித்துப் பேசினார். பிராட்லிக்கு உதவ பில் முன் வந்தார்.
டேவிட்! பிராட்லி சாருக்கு உதவ நான் தயார். நதி கொள்ளையர்களை எப்படி மடக்க வேண்டும், எப்படி சரக்கு படகுகளை காப்பாற்ற வேண்டும் என்று எனக்குத் தெரியும்!


பில்! அந்தப் பெண் உனக்கு பழக்கம் ஆனவளா?
இல்லே. அவள் இந்த விடுதியின் புது முதலாளி. பெயர் ஆன்னி. அவள் அணிந்து இருக்கும் நெக்லசை பார்த்தாயா? அனைத்தும் வைரங்கள்!


முதலாளி அம்மா! இங்கே வாங்க! என் நண்பரை அறிமுகம் செய்கிறேன்.
ஆன்னிக்கு சில படகுகளும் இருப்பதாக டேவிட்டிடம் பில் கூறினார்.

பில் அருகில் சென்ற ஆன்னி, அவர் முதுகில் தட்டி கொடுப்பது போல் ஒரு அறை கொடுத்தாள். பில் நிலைகுலைந்தான்.
பில்! சும்மா தட்டினேன். கீழே விழுந்து விடாதே! உனது நண்பருடன் நான் கை குலுக்க விரும்புகிறேன்!
வேண்டாம்! டேவிட்டின் கை ஒடிந்துவிடும்!


பிறகு டேவிட்டும், பில்லும் மிஸ்டர் பிராட்லி படகுகளுக்கு பாதுகாப்பு கொடுக்க வீரர்களின் பெயர் பட்டியலை தயார் செய்தனர். அப்போது ஆன்னி அங்கே வந்து—
பில்! என்னிடம் பலம் வாய்ந்த ரெண்டு வீரர்கள் இருக்காங்க. அவர்களையும் சேர்த்துக்கொள்.
பில்! கொஞ்சம் பொறு! இவர்கள் அவசரமா எங்கே போகிறார்கள் என்று பார்த்து-வருகிறேன்!

டர்னர், வின்சன் இருவரையும் டேவிட் பின்தொடர்ந்தார்.
ELLGEE RIVER FREIGHT Co
இவர்கள் அவசரமா போவதைப் பார்த்தால், யாரிடமோ ஒரு தகவலை அவசரமா சொல்ல போகிற மாதிரி இருக்கு! யார் அது? என்ன தகவல்?

உடனே டேவிட், அந்த கட்டிடத்தின் பின்புறம் போனார். திறந்து இருந்த ஜன்னல் வழியாக பேச்சுக் குரல் கேட்டது.
பிராட்லியின் மகன் சார்லசை கண்டுபிடித்து விட்டோம். ஒரு பாழடைந்த வீட்டில் அவன் பதுங்கி இருப்பதா தகவல்.
வெரிகுட்! நீங்க ரெண்டு பேரும் நேரே அங்க போங்க. சார்லசை தீர்த்து கட்டுங்க!

உடனே டேவிட், தான் ஏற்கனவே பார்த்து சந்தேகப்பட்ட அந்த கைவிடப்பட்ட வீட்டுக்குப் போய் சார்லசை காப்பாற்ற புறப்பட்டபோது—
என்ன தோழரே! சுவையா ஒட்டு கேட்கிறீரா?

திடீர் ஆபத்தை உணர்ந்தார், டேவிட். வீண் வார்த்தைகளுக்கு வேலை இல்லை என்று அறிந்த அவர் செயலில் இறங்கினார்.
ஆ! ஐயோ!


டேவிட்! ஒரே நேரத்தில் இருவரை சமாளிக்கும்போது, டர்னரும் வின்சனும் சத்தம் கேட்டு அங்கே ஓடி வந்தனர்.
ஐயோ!
ஏய் அது டேவிட்! ஓடி வா!


அவர்கள் சார்லசை பிடிக்கத்தான் போகிறார்கள் என்பதை உணர்ந்த டேவிட், உடனே குதிரையில் ஏற முனைந்தார். அப்போது அங்கே பில் வர—
பில்! அவங்க ரெண்டு பேரும் சார்லசை கொல்லப் போகிறார்கள். வாங்க. தடுப்போம்!

உடனே அந்த சதுப்பு நிலத்தை நோக்கி, டேவிட்டும், பில்லும் விரைந்தனர்.
அதோ அதுதான் அந்த வீடு!
நம் எதிரிகள் எங்கே?
இருவரும் அந்த வீட்டுக்குள் போய் பார்த்தனர். வீட்டில் யாரும் இல்லை. ஆனால் உள்ளே ஒரு போராட்டம் நடந்த அறிகுறிகள் தென்பட்டன.
பில்! இங்கே சண்டை நடந்து இருக்கு! சார்லசை இருவரும் தூக்கிப் போய் இருக்க வேண்டும்!
சதுப்பு நிலத்தில் கால் தடங்களைப் பார்த்து டேவிட்டும், பில்லும் பின் தொடர்ந்தனர்.
அதோ அவங்க! சார்லசை காப்பாற்ற வேண்டும்!
சகதி தண்ணீரில் ஆழ்த்தி கொல்லப்-போறாங்க!


டேவிட் தண்ணீருக்குள் பாய்ந்தார். அதே நேரத்தில் வின்சன், டர்னர் தலைக்கு மேலே பில் சுட்டார். பிறகு—
துப்பாக்கிகளை கீழே போடுங்க. கையை மேலே தூக்குங்க!
சார்லஸ்! அப்படியே மித! இதோ வருகிறேன்!

பல நிமிடப் போராட்டத்துக்கு பின் சார்லசை டேவிட் காப்பாற்றினார். அப்போது எதிரிகளை பில் துப்பாக்கி முனையில் நிறுத்தி இருந்தார்.


டர்னர், வின்சன் இருவரையும் சகதியில் தள்ளி கொன்று இருக்கலாம்; ஆனால் சாட்சிக்காக அவர் அவர்களை பிடித்துச் சென்றார்.
பில்! நீங்க சார்லசை அழைத்து போய், படகுகாரங்க மாதிரி உடை அணிந்து உங்களுடன் மறைத்து வைத்து இருங்க. நான் இந்த இருவருக்கும் ஒரு ஏற்பாடு செய்துவிட்டு வருகிறேன்!


பிறகு டேவிட் ஏற்கனவே சந்தித்த நீக்ரோ இளைஞனிடம் போய்—
தம்பி! நீ பயந்த பேயை பிடித்துவிட்டேன்! அதற்கு கைமாறாக நீ இந்த இருவரையும் அடைத்து வை!
ஓகே! அது எளிது சார். ஆனா சீக்கிரம் நீங்க இவர்களை அழைத்து போய்விடுங்க!

இருவரையும் கட்டி வைக்க நீக்ரோ இளைஞருக்கு உதவிய பின் டேவிட் புறப்பட்டார்.
பிராட்லியின் படகுகளை பாதுகாப்பா அனுப்ப பில் இந்நேரம் ஆட்களை தயார் செய்து இருப்பார்!
சார்லஸ் பாதுகாப்பாக இருந்தாலும், அவன் குற்றம் அற்றவன் என்று நிரூபிக்க வேண்டியதாய் இருந்தது.
எனவே வின்சனும், டர்னரும் மர்ம பாஸ் உடன் பேசிய ஆபீசுக்கு டேவிட் விரைந்தார்.
அந்த ஆபீஸ் காலியாக கிடந்தது. தரையில் நிறைய தாள்கள் சிதறி கிடந்தன.
இந்த கையெழுத்து... உம்! மர்ம பாஸ் அவனா?

அப்போது ஒரு மர்ம நிழலைப் பார்த்து சுதாரித்த டேவிட்,
தரையில் சரிந்து தப்பித்தார்.


பிறகு அதே வேகத்தில், அவன் திருப்பி சுடாமல் இருக்க
ஒரு நாற்காலியை வீசினார்.


டேவிட்டை சமாளிக்க முடியாது என்று அறிந்து கொண்ட அந்த மர்ம ஆசாமி, டேவிட்டின் குதிரை மீது ஏறி தப்பி ஓடினான்.
தப்பி ஓடட்டும். இனி இங்கு இருந்து பலன் இல்லை. நதியில் பில் எனக்காக காத்து இருப்பார்!
டேவிட், நதி துறைக்கு விரைந்தார்.
டேவிட்! உங்களுக்காக காத்து இருந்தோம். வராததால் புறப்பட்டோம்!
குதிரை பறி போய்விட்டது. அதனால் வர தாமதம் ஆகிவிட்டது, பில்!
டேவிட்! இது யார் என்று தெரிகிறதா? சார்லஸ்! படகு ஓட்டும் ஆட்கள் போல் மாற்றிவிட்டேன்! எப்படி?
என் தகப்பனாரை அழிக்க நினைப்பவர்களை முறியடிக்க சபதம் செய்கிறேன், டேவிட்!
வெரி குட் பில்!


நதிக் கொள்ளைக்காரர்கள் வருகிறார்களா என்று கரைகளை பார்த்தபடி பயணம் தொடர்ந்தது.
டேவிட்! இரண்டு படகுகள் சும்மா விடப்பட்டு உள்ளன! ஆட்கள் இல்லை!
ரெண்டு படகுகளுக்கும் நடுவில் இடைவெளி இருக்கு. அது வழியா போவோம்!


ஆனால் அந்த இரண்டு படகுகளிலும் கொள்ளையர்கள், பிராட்லியின் சரக்குகளை கொள்ளை அடிக்க மறைந்து இருந்தனர்.
அதுதான் பிராட்லியின் படகு. தாக்க தயார் ஆகு!

பில்! அங்கே பார்! சதி, பயங்கர சதி!

பிராட்லியின் சரக்கு படகை இரண்டு புறமும் பீரங்கிகள் தாக்கின.


பில்லின் ஆட்கள் சிலர் இறந்தனர். சிலர் தப்பினர்.
டேவிட்! உடனடியா படகுக்கு போவோம்!
பில்! அதனால் பலன் இல்லை. படகு மூழ்கிக்கொண்டு இருக்கு நம் ஆட்கள் பலர் இறந்துவிட்டனர். இந்த நிலையில் நாம் முதலில் உயிர் பிழைப்பதுதான் முக்கியம்!


பிராட்லியின் படகில் இருந்து விலை உயர்ந்த சரக்குகளை கொள்ளைக்காரர்கள் கொள்ளை அடித்தனர். டேவிட், பில் மற்ற படகுக்காரர்களுடன் ஒரு இடத்தில் கரை ஏறினர்.


மிஸ்டர் பிராட்லியின் படகு தண்ணீரில் மூழ்கியது. கொள்ளை அடிக்கப்பட்ட சரக்குகள் கரை ஏற்றப்பட்டன.
சீக்கிரம் வண்டியில் ஏற்றி நமது பாஸ்சின் கப்பலுக்கு கொண்டு போகணும். இதை பார்த்து அவர் ஆனந்தம் அடைவார்!

சதுப்பு நில காட்டில் டேவிட், பில் ஆகியோர் பின்தொடர்ந்தனர். ஆனால் பலன் இல்லை.
டேவிட்! நம்ம சரக்கு அதோ போகிறது. நம்மால் மீட்க முடியவில்லையே!
பில்! நான் காட்டில் பிறந்து வளர்ந்தவன். மறந்து விட்டாயா? அந்த வண்டித்-தடத்தை பின்பற்றி போவோம்!

டேவிட்டும், பில்லும் ஒரு விவசாயிடம் 2 குதிரைகளை வாடகைக்கு எடுத்தனர். படகு திருட்டுக்கு பின்னணியில் உள்ள மர்ம பாஸ்சை கண்டுபிடிக்க டேவிட்டும், பில்லும் புறப்பட்டனர். மற்றவர்களை ஒரு வண்டியில் ஏற்றி நியூ ஆர்லன்சுக்கு போகச் சொன்னார்கள்.

வண்டித் தடத்தை பின்தொடர்ந்து பல மைல்கள் பயணம் செய்தனர்.
வண்டிகள் இந்த வழியாக போய் உள்ளன! பின் தொடர்வோம்!
கொஞ்ச தூரம் போனதும் ஒரு பெரிய ஏரிக் கரையில் வண்டிகள் நிற்பதை பார்த்தனர்.
அந்த ஏரி மிகவும் ஆழமானது.
வண்டிகள் காலியாக உள்ளனவே?
பில்! சரக்கு முழுவதையும் அந்த கப்பலில் ஏற்றிப் போய்விட்டனர்!

டேவிட்! இந்த ஏரிக்கு அந்தப் பக்கம் பரினே என்ற ஏரி உள்ளது. அதற்கு அந்தப் பக்கம் சமவெளி தரை. பிறகு கடல். இந்த நிலையில் அவர்கள் சரக்கை எங்கே கொண்டு போகிறார்கள்?
ஏரி கரை ஓரம் ஒரு சந்தை இருக்கு. நாம் அங்கே போய் பார்ப்போம்!

அந்த சந்தையை நடத்திய ஆளை இருவரும் சந்தித்தனர். அந்தக் கப்பலை பல தடவை பார்த்ததாக கூறிய அவர்-
அது இங்கே நின்று, போகும். சமவெளியில் உள்ள முகத்துவாரத் துக்கு போகலாம். அல்லது பூனேத்- தீவுக்குப் போகலாம்!
பூனேத் தீவா?

பூனைத் தீவு கேள்விப்பட்டது இல்லையா? எல்லா துறைமுக கொள்ளையர்களும் கூடுகிற இடம் அது. அங்கே போகா--தீர்கள்!
நன்றி பெரியவரே! எங்க குதிரைகளுக்கு பதில் புதிதா 2 குதிரை தர முடியுமா?
2 புதிய குதிரைகளில் அவர்கள் புறப்பட்டனர்.
பில்! அந்த டெல்டாவுக்கும் தள்ளி கடலில்தான் பூனைத் தீவு இருக்கும். பிராட்லியின் சரக்குகள் அங்கேதான் இருக்கணும்.
அங்கே உள்ள கொள்ளையர்களை நம் இருவரால் சமாளிக்க முடியுமா?
பின்னர் இருவரும் திரும்பினர். பிராட்லி மாளிகையை நோக்கி பறந்தனர்.
பில்! நேரே நியூ ஆர்லான் நகரத்துக்குப் போ. ஒரு கப்பலை வாடகைக்கு எடு. உன் ஆட்களுடன் பூனைத் தீவு புறப்பட தயார் ஆகு. நான் பிராட்லியை பார்த்துவிட்டு வருகிறேன்.

இதற்கு இடையில், பிராட்லி மாளிகை மாடியில் மேரி இருந்தாள். கீழே ஒருவித சத்தம் கேட்க, அவள் கீழே பார்த்தாள்.
மிஸ் மேரி! உங்க அண்ணன் வந்து இருக்கார். யாரிடமும் எதுவும் சொல்லாமல் கீழே வாங்க!
மேரி பூனை போல் கீழே இறங்கினாள். வேலைக்காரர்கள் கண்ணில் படாமல் வெளியே வந்தாள்.
அண்ணன் எங்கே?
அந்த வண்டியில் இருக்கார். வாங்க, பார்க்கலாம்!
நீ...நீ... சார்லஸ் இல்லை!

மேரி சத்தம் போடுவதற்குள் ஒரு கனத்த போர்வையால் சுற்றி கட்டப்பட்டாள்.
இவளை வண்டியில் தூக்கிப் போடுகிறேன். உடனே இவளுடன் கிளம்பு. நான் பின்னால் வருகிறேன்!

1 மணி நேரம் கழித்து டேவிட் அங்கே வர—
யார் இது? இவனை எங்கோ பார்த்த நினைவு இருக்கே?

அதன்படி எழுதி வெளியே குதிரையில் காத்திருந்த கடத்தல் ஆசாமியிடம் பிராட்லி கொடுத்து அனுப்பினார். அவன் போனதும் டேவிட் புறப்பட்டார்

டேவிட் பின்தொடர்ந்து போனபோது, எதிரே ஒரு வண்டி வர, அவர் மறைந்து இருந்து பார்த்தார்.
பிராட்லியின் நண்பர் அந்தோணி! இவர் மீண்டும் போகக் காரணம் என்ன?

அந்தோணியை கடந்துதான், பணயச் செய்தியை கொண்டு போனவன் போய் இருக்க வேண்டும். இருவரும் பேசினார்களா?

அந்தோணி, பிராட்லியை சந்தித்துப் பேசினார்.
நண்பரே! உங்க நிலம் முழுவதையும் எனக்கு விற்று விடுங்க! உங்க பழைய தொழிலே மீண்டும் ஆரம்பியுங்க
நோ...நோ... நிலத்தை விற்க மாட்டேன்.


பணயப் பணம் தொடர்பான செய்தியை கொண்டு போனவன் ஒரு கேளிக்கை விடுதிக்குள் நுழைந்தான்.
விடுதி முன் நிற்பவர்கள் காவலாளிகள். விடுதியை சுற்றி வந்து நோட்டம் போடுகிறேன்!
கேளிக்கை —விடுதி—

விடுதியின் பின்புறம் டேவிட் வந்தார். அங்கேயும் 2 காவலர்களைப் பார்த்தார்
மேலும் 2 காவலாளிகள் எனவே மேரி இங்கேதான் இருக்க- வேண்டும்.


அப்போது குண்டுப் பெண் ஆன்னி அங்கே வர, டேவிட் அவளிடம் தான் வந்த விஷயத்தை கூறினார்.
கேளிக்கை விடுதி. ← முன் வாசல்.
இந்த விடுதிக்குள், மேரி மறைத்து வைக்கப்பட்டு இருக்க வேண்டும் என்று உங்களுக்கு சந்தேகம் இல்லையா? அப்படி ஆனால் விடுதிக்குள் படை எடுப்போம்! பில், ஒரு கப்பலை தயார் செய்வதில் மும்முரமாக இருக்கார்!

ஆன்னி, தன் கேளிக்கை விடுதியில் இருந்து, முரட்டு படகோட்டிகளை அழைத்து வந்தாள். அவர்களை ஒரு காவலாளி சுட முயல—
மகனே! சரியாக சுட்டாய்!

ஆன்னியும், டேவிட்டும் தங்கள் ஆட்களுடன் அந்த கேளிக்கை விடுதியை துவசம் செய்தனர். ஆன்னி கையால் குத்தியே பலரை வீழ்த்தினாள்!
ரொம்ப நாளா இந்த விடுதியை ஒரு-கை பார்க்க நினைத்தேன். இப்போதான் நேரம் கிடைச்சுது!


ஆன்னியின் ஆட்கள் பந்தாடுகையில், மேரியைத் தேடி டேவிட் மாடி ஏறினர்.
மேரி அடைபட்டு இருக்கும் அறை முன் காவலாளி இருப்பான்!


வராந்தாவில் இருந்த காவலாளியை டேவிட், ஒரே அறையில் வீழ்த்தினார். உள்ளே இருந்து வந்த காவலாளியை சுட்டார்.
ஆ! அம்மா!
மிஸ் மேரி! சீக்கிரம் என்னுடன் வா!

மேரியை அழைத்துக்கொண்டு டேவிட் கீழே வந்தபோது, அங்கே— பிராட்லி வந்துகொண்டு இருந்தார். அவர் பின்னால் அந்தோணி வந்தார்.
சார்! உங்க செல்ல மகளை அழைத்துச் செல்ல சரியான நேரத்தில் வந்தீர்கள்!


டேவிட் ரொம்ப நன்றி! விடுதிக்குள் என்ன நடக்கிறது?
கேளிக்கை விடுதி. முன் வாசல்.
இன்னொரு கேளிக்கை விடுதியைச சேர்ந்த அம்மையார், இந்த விடுதியை சுத்தப்-படுத்துகிறார்!

சார்! இந்த குதிரையில் உங்க மகளை ஏற்றிக்கொண்டு போங்க- நான், கப்பல் துறைக்கு போகிறேன். நீங்க இழந்த சரக்குகள் அனைத்தையும் மீட்க வேண்டும்!
டேவிட்! எனக்கு புரியவில்லை?

விளக்கி கூற டேவிட்டுக்கு நேரம் இல்லை. அவர் கப்பல் துறைக்கு ஓடினார். அங்கே கப்டாலுடன் காத்திருந்தார், பில்.
டேவிட்! சீக்கிரம் வா! நாங்க தயாரா இருக்கோம்!


உம்! முழு வேகத்துடன் பூனைத் திவை நோக்கிப்- போங்க!


கப்பல் பயணம் பல நாட்களாக நீண்டது. நியூ ஆர்லன்ஸ்சில் இருந்து ஆற்றின் மூலம் புறப்பட்ட கப்பல் பிறகு கடலுக்கு வந்து பூனேத் தீவை நோக்கி போகத் திட்டம்.
நதி வழியாக பூனேத் தீவுக்கு போவது நீண்ட பயணம் ஆகும்.
எத்தனை நாள் ஆனாலும் அந்த மர்ம "பாஸ்" மீது கை வைக்காமல் விடமாட்டேன்!
டேவிட்! நீ துல்யமா திட்டம் போட்டு செயல் படுகிறாய்
ஏரி
பர்னே ஏரி
பூனேத் தீவு
நியூ ஆர்லன்ஸ்

இதற்கிடையில் அந்த மர்ம பாஸ் தரை வழியாக புறப்பட்டு, ஏரிகளைக் கடந்து அங்கிருந்த தன் கப்பல் மூலம் பூனைத் தீவை அடைந்தார்.
பூனைத் தீவு துறை காலியாக உள்ளதே! கடல் கொள்ளைக்காரர்கள் அனைவரும் எங்கே?
தங்கத்தை ஏற்றிக்கொண்டு ஒரு கப்பல் வந்தது. அதைக் கொள்ளை அடிக்க அனைவரும் போய் இருப்பார்கள், பாஸ்!

மர்ம பாஸ், தன் சகாவுடன் கரை ஏறினார்.
பாஸ்! இங்கே இருப்பவர்கள் இவர்கள்தான். குடித்துவிட்டு மயங்கி கிடக்கிறார்கள்!
எல்லோரையும் அடித்து எழுப்பு. பீரங்கியை தயார் செய். டேவிட்டும், பில்லும் வரும் கப்பல் சீக்கிரம் வந்துவிடலாம்!

பூனைத் தீவை நெருங்கியதும் டேவிட்டும் மற்றவர்களும் தயார் ஆனார்கள்.
சார்லஸ்! நீயும் தயாரா?
டேவிட் சார்! இனி என் சொத்தையும் வியாபாரத்தையும் காப்பாற்ற போராடுவேன்!

கப்பல், பூனைத் தீவை நெருங்கியபோது, திடீர் என்று பீரங்கி முழங்க, குண்டுகள் படகு அருகே பாய்ந்து வந்து விழுந்தன.
கப்பலை வேகமா விடுங்க. சீக்கிரம் துறையை அடையணும். துறையை அடைந்தால், பீரங்கியால் குறி வைக்க முடியாது. பீரங்கி இருக்கும் இடம் அப்படி. உம்...!


பாஸ்!
இனி கப்பலைத்
தாக்க
முடியாது!
உம்...பீரங்கியை
விட்டுவிடு. அவர்களுடன் நேருக்கு
நேர் போர் செய்யுங்க. நான்
மறைந்து இருக்கும் இடத்தை
அவர்கள் யாரும் நெருங்கக்
கூடாது. உம்...போங்க!

கப்பல் கரையை அடைந்ததும், டேவிட்டும் மற்றவர்களும்
சீறும் சிறுத்தைகளாக பாய்ந்தனர்.

போரில். கடல் கொள்ளையர் அனைவரும் கொல்லப்பட்டனர்.
பில்! இனி மர்ம பாஸ் மறைந்து இருக்கும் இடத்தை கண்டுபிடித்து தாக்குவோம்!

மர்ம பாஸ், மூன்று கொள்ளையர் காவலுடன் பதுங்கி இருக்கும் வீட்டை டேவிட், பில், சார்லஸ் மூவரும் நெருங்கினர்.
வாங்க! சீக்கிரம் வாங்க!

காவலுக்கு இருந்த 3 கொள்ளையரையும் மூன்று பேர்களும் தாக்கி அழித்து பாஸ் மறைந்து இருந்த இடம் விரைந்தனர்.

மர்ம பாஸ், அப்பாவின் நண்பர் அந்தோணியா?
ஆமா, சார்லஸ்! இவர்தான் நதிக் கொள்ளையரின் தலைவர். இவர் இங்கே வந்து சேர்ந்த பிறகு நாம் வரவேண்டும் என்பதற்காகவே நதி வழியாக சுற்றிக்கொண்டு வந்தோம்!

டேவிட், பில்,சார்லஸ் ஆகியோர் அந்தோணியை கைதியாக பிடித்துக் கொண்டு தங்கள் கப்பலில் புறப்பட்டனர். அந்தோணி வந்த கப்பலில் பிராட்லியின் சரக்குகள் ஏற்றப்பட்டன.


கப்பல்கள் இரண்டும் நியூ ஆர்லன்ஸ் துறைமுகத்தை அடைந்ததும், சரக்குகள் இறக்கப்பட்டு, பிராட்லியின் கிட்டங்கிகளுக்கு கொண்டு செல்லப்பட்டன.
சார்லஸ்! உன் தந்தைக்கு வயதாகிவிட்டது. இனி நீ வீரத்துடனும், புத்திசாலித்தனமாகவும் வியாபாரத்தை நடத்து. நாங்க எப்போதும் உதவ தயார்!


அந்தோணிக்கு உடந்தையாக இருந்த வின்சன், டர்னர் இருவரையும் அழைத்து வரும்படி சார்லசை டேவிட் அனுப்பினார்!
அந்தோணியின் ஆபீசை நான் சோதனை போட்டபோது சில தாள்களை கைப்பற்றினேன். அவற்றின் மூலம், நீங்களும் அந்தோணியும் கூட்டாக வாங்கி உள்ள நிலத்தில் உள்ள மரங்களை அந்தோணி தனியாக விற்று இருப்பதும், தெரிய வந்தது.
ஓகோ! என்னை நஷ்டம் அடையச் செய்து, என் நிலங்களைக் குறைந்த விலையில் வாங்குவது இவர் நோக்கம். இல்லையா?


தனது சதி திட்டத்தை நிறைவேற்ற உங்கள் வாரிசான சார்லசை கொலைக்-குற்றவாளி ஆக்கினார்.
நிலத்தை எனக்-கிரயத்தில் விற்க, என் மகளைக்-கடத்தினான்.
மிஸ்டர் பிராட்லி! என்னை நீர் ஜெயிலுக்கு அனுப்பலாம். ஆனால் உமது மகன் தூக்கு கயிற்றில் இருந்து தப்ப முடியாது!


அப்போது நீக்ரோ வாலிபன், வின்சன், டர்னர் ஆகியோருடன் சார்லஸ் அங்கே வந்தான். வின்சன், டர்னர் இருவரையும் பார்த்து அந்தோணி பதறினார்.
பாஸ் அந்தோணி அவர்களே! உங்க உத்தரவு—படிதான் நகை வியாபாரி லூயிசை கொன்றோம்.
முட்டாளே! உன்னை பேசாமல் செய்கிறேன்!

அந்தோணி, கோட் உள் பையில் இருந்த துப்பாக்கியை எடுத்து சுட — முயலும் முன், சார்லஸ் கையில் இருந்த துப்பாக்கியை பறித்து, வின்சன் சுட்டான்.
ஆ! அம்மா!


பிறரை கெடுக்க சதி செய்த அந்தோணி இறந்தான். அவனுக்கு உடந்தையாக இருந்த வின்சன், டர்னர் இருவரும் ஜெயிலில் அடைக்கப்பட்டனர்.
டேவிட்! என் குடும்பத்தை காப்பாற்றிய உனக்கு என்ன கைமாறு செய்யப் போகிறேன்.
நட்புக்கு வெகுமதி தேவை இல்லை. அந்தோணியின் கப்பலை, கோர்ட் உங்களுக்கு கொடுத்து இருக்கு. அதை "பில்"லுக்கு கொடுக்கும்படி கேட்டுக் கொள்கிறேன்.


எல்லாம் முடிந்த பிறகு வேட்டை வீரர் டேவிட், தனது காட்டுப் புற சொந்த ஊருக்கு புறப்பட்டார். ராட்சத வீரன் பில், குண்டுப் பெண் ஆன்னி கோடீஸ்வரர் பிராட்லி, மகன் சார்லஸ், மகள் மேரி எல்லோரும் அவரை வழி அனுப்பினர்.
முற்றும்

மேலே உள்ள படத்தில் பொருட்களை ஒரு சிறுமி அலமாரியில் வைத்து பூட்டினாள். மறுநாள் திறந்து பார்க்கும் போது கீழே உள்ள படத்தில் உள்ளபடிதான் பொருள்கள் இருந்தன.

காணாமல் போன பொருட்கள் எவை? எவை?





தொடர் கொலை!

-சித்ரா மணாளன்-

13. கடிதம்!

"டேய்! அங்கே ஓடுகிற ரெண்டு பேரையும் பிடிங்கடா. நான் காரை எடுத்துக்கொண்டு வருகிறேன்!"

—கல்யாண் சொல்லி முடிப்பதற்குள் பட்டேலும் பாட்சாவும் வாழைத் தோட்டத்துக்குள் பாய்ந்தார்கள்.

தப்பி ஓடும் அந்த மர்ம மனிதர்கள் எங்கே எங்கே என்று அவர்கள் கண்கள் துளாவின.

கல்யாண் ஓடிச் சென்று இரண்டு வைக்கோல் படப்புகளுக்கு இடையே மறைத்து விடப்பட்ட காரை அடைந்தான்.

அதிக ஓசை இல்லாமல், ஹெட் விளக்குகளைக் கூட போடாமல் ஓட்டிச் சென்றான்.

வாழைத் தோட்டங்கள் முடிந்து பிரதான சாலையுடன், ராணி மங்கலம் செம்மண் ரோடு சேரும் சந்திப்பை நோக்கி கார் போனது.

மழை விடவில்லை.

தூரத்தில் இரண்டு மர்ம மனிதர்களைக் கண்டுகொண்ட பட்டேலும், பாட்சாவும் வேகத்தை அதிகரித்தனர்.

மர்ம மனிதர்களான கன்னுவும் பாட்சாவும் வாழைத் தோட்டத்தில் இருந்து மோட்டார் சைக்கிளை எடுத்துக்கொண்டு "தட் தட்!" என்று பறந்து சென்றனர்.

அவர்களைப் பின்தொடர்ந்து பாய்ந்து, பறந்து வந்த பட்டேலும் பாட்சாவும் செம்மண் சாலை வந்து, திகைத்து நிற்கையில், குப்பென்று வியாபித்தது ஒரு வெளிச்சம்.

கல்யாண், காருடன் அங்கே வருவதை உணர்ந்துகொண்ட இருவரும், உடனே காரில் ஏற ரோட்டின் இருபுறம் பிரிந்து நின்று கொண்டனர்.

கார் குலுங்கி நின்றது.

"என்னடா?" கல்யாண் கேட்டான்.

"மோட்டார் சைக்கிளில் தப்பிவிட்டார்கள்!" பட்டேல், பாட்சா இருவரும் கூறிக்கொண்டே காரில் ஏறினர்.

மழையில் நனைந்திருந்த செம்மண் சாலையில் கார் உறுமிக் கொண்டு பறந்தது.

மோட்டார் சைக்கிள் தென்படுகிறதா என்று மூவர் கண்களும் ரோட்டை துளாவின.

மழை, செம்மண் ரோடு என்று எல்லாம் பாராமல் காரை கல்யாண் கண் மண் தெரியாமல் ஓட்டினான்.

செம்மண் ரோடு பிரதான சாலையில் சந்திக்கும் இடத்தில் கல்யாண் தயங்கினான். இனி வலப்புறம் போகவா? இடப்புறம் போகவா?

ஒரு அனுமானத்தில் கார் வலப்புறம் திரும்பியது. கச்சிதமாக இருந்த அந்த தார் ரோட்டில் அந்த வெளிநாட்டுக் கார் வேகவேக மாக பறந்தது.

பட்டேலும், பாட்சாவும் தலை ஈரத்தை துடைத்தனர்.

ஐந்து நிமிடம் போய் இருப்பார்கள். கல்யாண் சந்தேகத்தை கிளப்பினான். "டேய் கம்பெனிகளா? இடப்புற சாலையில் திரும்பி இருப்பார்களோ? மோட்டார் சைக்கிளை காணுமே!"

கல்யாண் சந்தேகத்தை பட்டேலும், பாட்சாவும் ஊர்ஜிதம் செய்தார்கள்.

கார் நின்று, பின்புறம் திரும்பி பிறகு எதிர் திசையில் பறந்தது.

கல்யாணின் பார்வை, கவனம் எல்லாம் சாலையில் மட்டுமே பதிந்து இருந்தது.

"கல்யாண்! இந்த மர்ம ஆசாமிகளை நாம் பிடிக்க வேண்டுமா? அதனால் நமக்கு என்ன லாபம்?" — பட்டேல் சந்தேகத்தைக் கிளப்பினான்.

"ஆமான்டா கல்யாண்! மீண்டும் ராணிமங்கலம் போவோம். காரை தூரத்தில் நிறுத்திவிட்டு கல்லறைத் தோட்டத்தினுள் நுழைவோம். மன்னர் சமாதியை உடைப்போம். தங்கத் தாயத்தை எடுப்போம்!"—பாட்சா யோசனை கூறினான்.

காரை மின்னல் வேகத்தில் செலுத்திக்கொண்டே கல்யாண் பதில் கூறினான். "டேய் பசங்களா! நான் ஏற்கனவே சொல்லி இருக்கிறேன். அந்த தங்க தாயத்தை எடுப்பதில் நம்மைப் போல் வேறு சிலரும் முயற்சி செய்கிறார்கள் என்று. அவர்களில் கோலப்பனும் ஒருவன். அவன் கொலை செய்யப்பட்டுவிட்டான் இனி தங்கத் தாயத்தை பொருத்தவரை அவனால் பிரச்சினை இல்லை. ஆனால் அவனை கொலை செய்த இந்த மர்ம ஆசாமிகள் யார்? அவர்களைப் பற்றி தெரிந்து கொள்ள வேண்டும். தவிர, இன்று நாம் இனிமேல் சமாதி பக்கம் தலைவைத்துக் கூட படுக்கக்கூடாது!"—கல்யாண் கூறிக்கொண்டே எதிரே தூங்கிக்கொண்டே வந்த ஒரு மாட்டு வண்டியை கடந்தான்.

மழை விட்டிருந்தது.

மீண்டும் காரின் வேகத்தை ஏற்றிய கல்யாண், "அங்கே கோலப்பன் கொலையாகி விழுந்து கிடக்கிறான். மன்னர் வேடப்ப உடையாரின் பேய் நடமாடிக்கொண்டு இருக்கிறது. நாம் தெரிந்துகொள்ள வேண்டிய அந்த பைத்தியக்கார பிச்சைக்காரனை இன்று காணவில்லை! என்றான்.

"கல்யாண்! அதோ மோட்டார் சைக்கிள்!" பாட்சா பரபரத்தான்.

கல்யாண் ஆக்சிலேட்டரை மேலும் அழுத்தினான்.

மோட்டார் சைக்கிளின் வேகமும் அதிகரித்தது.

"டேய் கல்யாண் மோதுடா!"

"இருடா! அப்படியே அவர்களை ஓரம் கட்டிவிடுகிறேன்!"

கொஞ்ச தூரம் மோட்டார் சைக்கிளுக்கும், காருக்கும் கண்ணும் பூச்சி விளையாட்டு நடந்தது.

சர்ரென்று திரும்பி மோட்டார் சைக்கிள் ஒரு காம்பவுண்டுக்குள் நுழைந்தது.

உடனே, திறந்து இருந்த இரும்பு கதவுகள் மூடப்பட்டன.

கதவை இரண்டு கூர்க்கா காவலாளிகள் மூடுவதை கல்யாணும் நண்பர்களும் பார்த்தனர்.

கார் நேரே சென்று, ஒரு இடத்தில் நின்றது.

"கல்யாண்! அந்த காம்பவுண்டுக்குள் நுழைந்து பார்த்து விடுவோமே?"

"வேண்டாம். காலையில் விசாரியுங்கள். அந்த வீடு யாருடையது என்று!"

"காலை வரை காத்திருக்க வேண்டுமா?"

ஆழம் தெரியாமல் காலை விடாதே. அவர்கள் கொலைக்கு அஞ்சாத பாதகர்கள் என்பதை கொஞ்சம் முன்தானே பார்த்தோம்!"

கல்யாண் மீண்டும் காரை கிளப்பினான்.

"கல்யாண்! எங்கள் இருவரையும் இங்கேயே இறக்கிவிடு. காலையில் எல்லா விவரங்களையும் தெரிந்துகொண்டு, உன்னை சந்திக்கிறோம்!"

அதன்படி அவர்களை இறக்கி விட்டுவிட்டு கல்யாண் புறப்பட்டான்.

★ ★ ★

மறுநாள்.

சப்-இன்ஸ்பெக்டர் முன் செல்ல, அவரை அரண்மனை காரியஸ்தர், புனிதா, நந்தன் மூவரும் பின்தொடர்ந்தனர்.

இரவில் பெய்த மழையில் தண்ணீர் ஆங்காங்கே தேங்கி நின்றது.

எல்லோரும் கல்லறைத் தோட்டத்தை அடைந்தனர்.

சகதியில் கோலப்பன் பிணமாக கிடந்தான்.

"அக்கா! மாமா பாவம்! இல்லையா?" என்று நந்தன் கிசுகிசுத்தான்.

புனிதா தலையை ஆட்டினாள்.

கோலப்பன் பிணம் அருகே வந்து நின்றுகொண்ட சப்-இன்ஸ்பெக்டர், "கத்தியால் குத்தப்பட்டு இருக்கிறார். தலையில் பலத்த அடிபட்டு, தலை உடைந்திருக்கிறது!" என்று கூறினார்.

புனிதா அவர் அருகே வந்து "சார்! அவர் நேற்று சாயங்காலம் அரண்மனையை விட்டு புறப்பட்டு போய்விட்டார். அப்படிப் போனவர் காலையில் இங்கே, இப்படி. பிணமாக கிடப்பதைப் பார்த்தால் ஆச்சரியமாக இருக்கிறது."

"மிஸ் புனிதா! அவர் இரவில் உங்களை பழி தீர்க்க வந்து இருக்கலாம். அல்லது வேறு கெட்ட நோக்கத்தோடு இங்கே அரண்மனைக்குள் நுழைந்து இருக்கலாம்!"

"சப்-இன்ஸ்பெக்டர்! என்னை பழி தீர்க்க கோலப்பன் இங்கே வந்து இருக்கலாம் என்றால். அவரை நான்தான் கொன்றேன். என்கிறீர்களா?"—புனிதா படபடத்தாள்.

"நோ...நோ..." நான் அப்படி கூறவில்லை?"

"பின்னே?"

"கோலப்பன் கொலை செய்யப்பட காரணம் என்ன? அவரைக் கொன்றது யார்?" என்பதை கண்டுபிடிக்க வேண்டும்!"

"கண்டுபிடியுங்க. அது உங்க டிபார்ட்மெண்டோட வேலை!"

"கோலப்பன் இங்கே, கல்லறைத் தோட்டத்துக்கு வரக் காரணம் என்ன?"

"எங்களுக்குத் தெரியவில்லை. ஒருவேளை முன் "கேட்"டில் போலீசார் காவல் இருந்ததால், பின்புறமா வந்ததால் அவர்களுக்கு தெரியாமல் அரண்மனைக்குள் நுழைந்துவிடலாம் என்று நினைத்து வந்து, இருக்கலாம்."

"சரி! அப்படியே வைத்துக்கொள்வோம். ஆனால் அவரைக் கொலை செய்தது யார்? முன்பு இரவு காவல்காரரை கொலை செய்தது போல் திருடர்களா?"

இந்த நேரம் அரண்மனை காரியஸ்தர் குறுக்கிட்டு, "சார்! அதை எல்லாம் நீங்க கண்டுபிடியுங்க சார். தொடர்ந்து அரண்மனைக்குள் ரெண்டு கொலை நடந்து இருக்கு. சீக்கிரம் உங்க விசாரணையை முடியுங்க!" என்று கூறினார்.

உடனே சப்-இன்ஸ்பெக்டர் காவலர்களை அழைத்து கோலப்பன் பிணத்தை போஸ்ட்மார்ட்டம் செய்யக் கொண்டு போகும்படி உத்தரவிட்டார்.

கோலப்பனின் பெட்டி. பை ஆகியவற்றை சோதனை போடும்படி உத்தரவிட்டார்.

அதனுள் கத்தி, துப்பாக்கி எல்லாம் இருப்பதாக போலீஸ்காரர் கூறியதைக் கேட்டு சப்-இன்ஸ்பெக்டர் அதிர்ச்சி அடைந்தார்.

அவர் போலீஸ் நிலையம் திரும்பியதும், கோலப்பன் கொலை பற்றி எப். ஐ. ஆர். எழுதினார்.

அப்போது டெலிபோன் அடித்தது. எடுத்து பேசினார்.

"என்னது? சார்...சார்...நீங்களா பேசறது?"—ஆச்சரியத்தில் சப்-இன்ஸ்பெக்டர் எழுந்துகொண்டார். "சார்! எங்கே இருந்து பேசறீங்க? அப்படியா?...சரி...சார், சொல்லுங்க."

நீண்ட நேரம் சப்-இன்ஸ்பெக்டர் போனை காதில் வைத்துக் கொண்டு கேட்டார். அவர் முகம் பலவித உணர்ச்சிகளை பிரதிபலித்தது.

15 நிமிடம் கழிந்தது.

"சரி சார்! நீங்க வந்து. அந்த மடை மீது உட்கார்ந்து இருங்க. ஒரு கான்ஸ்டபிளிடம் கடிதத்தைக் கொடுத்து அனுப்புகிறேன்!"—சப்-இன்ஸ்பெக்டர், போனை வைத்துவிட்டு ஒரு கடிதம் எழுதினார்.

★ ★ ★

கடிதத்தை புனிதா படித்தாள்.

பிறகு எதிரே நிற்கும் வாலிபனை ஏறெடுத்து பார்த்தாள்.

அடர்த்தியான பெரிய புருவங்கள். முகத்துக்கு அதிகமான பெரிய மீசை. கம்பீரமான தோற்றம்.

"உன் பெயர் முனியாண்டியா? இதற்கு முன் என்ன செய்தாய்?"

"எனக்கு திருநெல்வேலி ஜில்லாங்க. மழை, தண்ணி இல்லாத ஒரு ஊரு. விவசாயம் கைவிட்டு விட்டது. இந்த சப்-இன்ஸ்பெக்டர் எங்க ஊருகாரருங்க. வயிற்று பிழைப்புக்கு ஏதாவது வேலே வாங்கி தாங்க அப்படீன்னு கேட்டேன். அவரு இந்த லட்டரை கொடுத்து அம்மாவ பார்க்கச் சொன்னாரு. வந்தேனுங்க!"

புனிதா அந்த வாலிப விவசாயியை மீண்டும் ஏற இறங்க பார்த்தாள். பிறகு, "உம்...சப்-இன்ஸ்பெக்டரே உனக்கு ஜாமீன் கொடுக்கும் போது, எனக்கு திருப்திதான். இரவு காவல்காரன் வேலேதான் காலியா இருக்கு. பார்த்துக்கொள்வியா?"

"பார்த்துக்கொள்வேன் அம்மா!"

"எங்கே தங்குவே?"

"இந்த அடிமை மீது இரக்கம் கொண்டு, அம்மா பெரிய மனசு பண்ணி. அரண்மனையிலே ஒரு ஓரமா தங்க இடம் கொடுத்தால் நல்லது!"

புனிதா ஒரு கணம் யோசித்தாள். பிறகு "சரி" என்றாள். "நீ போய் காரியஸ்தரை பார்" என்று கூறி அந்த கடிதத்தில் ஏதோ எழுதி, அதை விவசாய வாலிபனிடம் கொடுத்தாள்.

அவன் அரண்மனை ஆபீசை நோக்கி நடந்தான்.

புனிதா அவனையே பார்த்தாள்.

"ஏய்! புனிதா! இந்த ஆள் விவசாயி இல்லே. உன்னிடம் "டூப்" விடுகிறான்" என்றது அவளது மனசாட்சி.

விவசாயி இல்லே என்றால் யார்? சேச்சே! நம்பிக்கை இல்லாத ஆளாக இருந்தால் சப்-இன்ஸ்பெக்டர் கடிதம் கொடுத்து அனுப்புவாரா?

புனிதா மனதை சமாதானம் செய்துகொண்டாள்.

பிறகு கை விரலே பார்த்தாள். எமரால்டு மோதிரம் அவளைப் பார்த்து சிரித்தது. அதில் இருந்த "கே" எழுத்து கண்சிமிட்டியது.

இந்த மோதிரத்தை அணிவித்த அந்த "கே" கல்யாணாக இருக்கக் கூடாதா? அந்தக் கல்யாண்தான் இங்கே மாறுவேடத்தில் வேலைக்கு வந்து இருக்கக்கூடாதா?"

—அவள் மனம் ஏங்கியது.

(இந்தக் கதையின் தொடர்ச்சி அடுத்த இதழில் வெளிவரும்.)

ராணி சிண்டிகேட் சார்பில் அச்சிட்டு, வெளியிட்டவர்: சி. கல்யாணசுந்தரம், ராணி அச்சகம், 1091, பெரியார் நெடுஞ் சாலே, சென்னை—600 007. ஆசிரியர்: எஸ். ராமஜெயம் பி. ஏ., 1091, பெரியார் நெடுஞ்சாலே, சென்னை—600 007.

கூர்க்கா வீரன்!

"கூர்க்கா வீரன்!" சித்திரக் கதை, "புகழை விரும்பாத வீரன் கிடையாது. வீரத்தையும் புகழையும் பிரிக்க இயலாது!" என்பதை நிரூபித்த நல்ல கதை! —தமிழ்செல்வி மின்சிவா. நாகர்கோவில்-1.

கூர்க்கா வீரன் கதையை மூன்று முறை படித்த பிறகுதான் என் மனம் அமைதி அடைந்தது! —எச். கிருஷ்ணன், திருவட்டார்.

—அ. அப்துல் வகாப், நாமக்கல்.

மாறுபட்ட, விறுவிறுப்பான கதை!

—எம். எஸ். வேல்முருகன், திருவாரூர்.

—கி. பாண்டுரங்கன், மதுரை-10.

கேப்டன் லேசரை தாக்கிவிட்டு ஜப்பானியர் விமான தளத்தை ஹாரி தாக்குவது அற்புதமான கட்டம்!

—டி. நூருல் அமீன், சோழபுரம்.

—ஆர். நடராஜன், இடையகோட்டை.

—எம். எஸ். ஜின்னு ஜெகபர் அலி, நீடூர்.

—வி. ராஜா, ஏழுகிணறு, சென்னை-1.

ராணுவப் போர் எப்படி நடக்கும் என்பதை கண் முன் காட்டிய கதை கூர்க்கா வீரன்! கண்ணில் ஒற்றிக்கொண்டேன்!

—வி. ராஜராஜ சோழன், மணப்பாறை.

மாவீரன் ஹாரிக்கு தளபதி பதவி கொடுங்கள்!

—ப. சரவணன், மயிலாடுதுறை 1.

அட்டைப் படம் அசத்திவிட்டது!

—இரா. வேங்கை மார்பன், மதுரை-3.

—பெ. சிவக்குமார், அருணாசலபுரம்.

தொடர் கொலை!

சித்ரா மணாளன் எழுதும் தொடர் கொலை, தொடர்கதையில் தங்கத் தாயத்தை எடுக்க நடக்கும் போராட்டத்தை நினைக்கும்போது நெஞ்சு துடிக்கிறது! —கே. மகேஸ்வரன், நாமக்கல்-1.

—ஏ. சுப்பிரமணியம், கைக்கோளபாளையம்.

புனிதா அக்காவுக்கு எந்த ஆபத்தும் வராமல் பார்த்துக்கொள்ளுங்கள்! —டி. ரீனு, செல்வபுரம், கோவை.

—எஸ். சாந்தி, குமாரபாளையம்.

ஒவ்வொரு வரியிலும் வேகம், வேங்கை வேகத்தில் உள்ளது!

—அ. அப்துல் வகாப், நாமக்கல்.

—ச. அகஸ்டின் ஜெயகுமார், திருவண்ணாமலை.

—ஜே. குப்புதீன், அடியக்கமங்கலம்.

சித்ரா மணாளனின் கற்பனைத் திறனை வியந்து பாராட்டுகிறேன்!

—மே. வே பாலாஜி, சென்னை-78.

தொடர் கொலையை, நான் புத்தகமாக சேர்த்து வருகிறேன்!

—எஸ். மைதிலி குமார், பாட்டுபட்டி.

புதிய கதாபாத்திரங்களை வரவேற்க காத்து இருக்கிறோம்!

—இரா. ஜா. ஸ்ரீதர், வேதாரண்யம்.

ரூ.50- பரிசு: கருத்துப் போட்டி-42

"பூனைத் தீவு!" சித்திரக் கதையை படித்துவிட்டீர்கள் அல்லவா? இனி இந்தக் கதையில், 46-ம் பக்கத்தில், ஒரு ஆள் கூப்பிட்ட உடனே மேரி கீழே இறங்கி போனது சரியா தவறு என்று உங்கள் கருத்தை, "ராணி காமிக்ஸ்", ஒரு பக்க அளவுக்கு மிகாமல், எழுதி அனுப்புங்கள்.

மிகச் சிறந்த கருத்துக்கு ரூ. 50 பரிசு வழங்கப்படும்.

தேர்ந்து எடுக்கப்பட்ட கருத்து, 15-8-86 இதழில் பிரசுரிக்கப்படும்.

கருத்துப் போட்டி நிபந்தனைகள்:—

(1) கருத்துக்கள் எங்களுக்கு வந்து சேரவேண்டிய கடைசி தேதி: 25-7-86. அதன்பின் வரும் கருத்துக்கள் போட்டிக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

(2) போட்டியில் கலந்து கொள்பவர்களுக்கு வயது வரம்பு கிடையாது.

(3) போட்டியில், ஆசிரியர் தீர்ப்பே முடிவானது. சட்டப்படி கட்டுப்படுத்த முடியாது.

(4) கீழே உள்ள பாரத்தை பூர்த்தி செய்து, "கருத்து"டன் சேர்த்து அனுப்ப வேண்டும். அது இல்லாமல் வரும் கருத்துக்கள் ஏற்றுக்கொள்ளப் படமாட்டா.

கருத்துப் போட்டி எண்: 42

பெயர்: ....

முகவரி: ....

....

....

....

போட்டி நிபந்தனைகளுக்கு கட்டுப்படுகிறேன்.

....

(கையொப்பம்)

முகவரி:—
கருத்துப் போட்டி,
"ராணி காமிக்ஸ்",
1091, பெரியார்
நெடுஞ்சாலை,
சென்னை-600 007.

மீநம் மன்..!



நர்ஸ்:- டாக்டர்கள் எல்லோரும் வேலை நிறுத்தம் செய்கிறார்கள். வைத்தியக் கல்லூரியில் முதல் ஆண்டு படிக்கும் மாணவர் ஒருவர் ஆபரேஷன் செய்கிறேன் என்கிறார். உங்களுக்கு சம்மதமா?



மகன்:- அப்பா டி. வி. ரிப்பேர் என்றீர்களே. படம் தெரியுதே!

தகப்பனார்:- அது நிகழ்ச்சி இல்லை. நான் மந்திரியாக இருந்தபோது எடுத்த படத்தை ஒட்டி வைத்து உள்ளேன்.

எங்கள் பகுதியில் வேலை நிறுத்தம், குழப்பம், கலவரம் எதுவும் இல்லை. அரசியல் வாதிகள் இல்லாத பிற்பட்ட பகுதி அது!"

RANI COMICS
(TAMIL FORTNIGHTLY)

Regd. No. TN/MS(N)/461

ராணி காமிக்ஸ்

அடுத்த இதழில்...!

"குங்க்-பு" மன்னன்
புரூஸ்-லீ
தோன்றும்

வைரச் சுரங்கம்!

முழு நீள சித்திரக் கதை!

சித்ரா மணாளன் எழுதும்

தொடர் கொலை!

திகில் தொடர் கதை!

ரூ.50 பரிசு!
வாசகர் போட்டி!

படிக்கத் தவறாதீர்கள்!

ராணி காமிக்ஸ்

1·8·86·ல்- வெளிவருகிறது

PRINTED AT RANI PRINTERS, MADRAS-7.